*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.36*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Poets Named After Similes in Kuruntokai

**Kaaviya S[1*], Dr. S. Selvakumar[2],**
[1]Ph.D. Research Scholar, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Bharathiar University, Coimbatore.
[2]Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Bharathiar University, Coimbatore.
[*]Correspondence: skaviyatamil@gmail.com

**Article Info**
Received on 29-Mar-2026, Revised on 29-Mar-2026, Accepted on 30-Mar-2026, Published on 01-April-2026

**ABSTRACT**

As a testament to the noble literary perspective in Sangam Literature that "the creation is greater than the creator," the work titled Kuruntokai is celebrated as the "Good Kuruntokai" (Nalla Kuruntokai). It minutely records emotions related to Akam (interior life/love). Poets nurtured the Tamil language through a combination of intellect and effort. Through their endeavors, they expressed numerous concepts via the Tamil language—beyond just literary and grammatical texts—in a way that everyone could understand.

Even amidst civilizational growth, these poets outlined methods for writing in a language free from corruption. The poets of Kuruntokai and their writings are the reason these works remain distinguished, integrating excellence of similes, beauty, love, and the pain of separation within a single poem. This article explores these aspects.

***KEYWORDS:*** *Kuruntokai, Sangam Literature, Similes, Poets, Tamil Literature, Muntril, Nurai, Kal, Peyalneer, Vittakkuthirai, Nivakkum.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.36*

# குறுந்தொகையில் உவமையால் பெயர் பெற்ற புலவர்கள்

[1]**ச. காவியா,** முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

[2]**முனைவர் சு.செல்வக்குமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

**முன்னுரை**

தமிழ் இலக்கியமான சங்க இலக்கியத்தில் "படைப்பாளனை விட படைப்பே பெரியது" எனும் உயர்ந்த இலக்கியப் பார்வைக்குச் சான்றாகவும், *"நல்ல குறுந்தொகை"* என சிறப்பிக்கப்பட்டும், அகம் சார்ந்த உணர்வுகளை மிக நுட்பமாகவும் பதிவு செய்கின்றது. அறிவும் முயற்சியும் உடன் கூறி தமிழை வளர்த்து வந்தார்கள் புலவர்கள். அவர்களின் முயற்சியால் இலக்கிய, இலக்கண நூல்கள் மற்றுமின்றி பல கருத்துக்களை தமிழ் மொழியின் வாயிலாக அனைவரும் உணரும் வகையில் எடுத்துரைத்தார்கள். நாகரிக வளர்ச்சி ஏற்பட்டாலும் மொழியில் கலப்பின்றி எழுதுவதற்கான வழிமுறைகளை புலவர்கள் குறிப்பிடுகிறார்கள். உவமை சிறப்பு, நலன், காதல், வலி என அனைத்து நிலைகளன்களும் ஒரே பாடலில் பயின்று வரும்படி சிறப்பு மிக்கதாக அமையும் வகையில் குறுந்தொகை புலவர்களும் அவர்களின் எழுத்துக்களும் காரணமாக அமைகின்றன. இதனை கட்டுரையின் வாயிலாக காணலாம்.

**திறவுகோல்**

முன்றில் - வீடு, முற்றம் அல்லது இடைகழியை , நுரை - கடல் திவலை, குமிழி, மொக்குள் , கல் - பாறை , பெயல்நீர் - மழைநீர் , விட்டக்குதிரை - அவிழ்த்து விடப்பட்ட குதிரை , நிவக்கும் - நிமிர்தல்.

**குறுந்தொகை**

பண்டைய இலக்கியங்களிலே தனித்த சிறப்பைப் பெற்று விளங்கக் கூடியவை, சங்க இலக்கியங்கள் ஆகும். சங்ககால மக்களது வாழ்வினை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் காலப்பெட்டகமாக சங்க இலக்கியங்கள் திகழ்கிறது. இச்சங்க இலக்கியங்களில், கடைசங்க காலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய **'குறுந்தொகநானூறு'** அகவட்பாவால் அமைந்த ஒரு அகப்பொருள் நூலாகும். இந்நூலின் பாடல்கள் நான்கு அடிச்சிற்றெல்லையாகவும் ,எட்டடி பேரெல்லையாகவும் உள்ளது. ஆனால், ஒன்பது அடியில் அமைந்துள்ள 307, 391 ஆகிய இரு பாடல்களும் இத்தொகையில் இடம் பெற்றுள்ளன. இது **'நல்ல குறுந்தொகை'** எனவும் அழைக்கப்படுகிறது. உரையாசிரியர்களால் மிக அதிகமான உவமை, உள்ளுறை , இறைச்சி, மேற்கோள் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ள பெருமை குறுந்தொகைக்கு சாரும். இதனைக் கட்டுரை வாயிலாகக் காணலாம்.

**உவமை**

உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு பொருளினையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இயல்பு மனிதனின் இயல்பாகும். எனவே, மனிதன் தோன்றிய காலத்திலேயே உவமையும் தோன்றிவிட்டது எனலாம். **'அறிந்த ஒன்றை அறியாத ஒன்றோடு ஒப்பிடுவது உவமை ஆகும்'. "அழகுள்ள பொருளை மற்றொன்றின் அழகோடு ஒப்பிட்டுக் காணும் இந்த உவமையே கலைகள் பலவற்றிக்கும் அடிப்படையான கலையாகும். (இலக்கிய திறன் -ப.239)** என்று மு.வரதராசனார் கூறியுள்ளார். உவமையும் அதனை ஆளும் திறனும் ஒரு கலையாகும் என்கிறார்.

**"ஒன்றிற்கு உவமை கூறும் பொழுது அதன் சிறப்பையோ, அழகையோ, காதலையோ, வலிமையையோ புலப்படுத்தும் அல்லது அதன் இழிவை வெளிப்படுத்தவும் உவமை கூறப்படுகிறது" . (சங்க இலக்கிய ஒப்பீடு ப.51)** என்று தமிழண்ணல் கூறுகிறார். ஒரு பொருளின் அழகை மேலும் அழகுற சிறப்பாக உள்ளத்தை உள்ளபடி சொல்வதே உவமையாகும் என அறியப்படுகிறது.

**புலவர்கள்**

அறிவும்,முயற்சியும் உடையோர் தமிழில் ஒன்று கூடி தாம் அறிந்தவைகளையும் தாம் செய்பவர்களையும் ஒருவருக்கொருவர் தெரிவித்து மேலும் மேலும் அறிவிலும் முயற்சியிலும் மேம்பட்டு தம்மை போல் அறிவும் முயற்சியும் வாய்க்காத ஏனைய பொது மக்களுக்கு தம் அறிவையும் முயற்சியும் புலப்படுத்தி காட்டுபவரே புலவர். அவ்வகையில் குறுந்தொகை புலவர்களில் 18 புலவர்கள் தங்கள் பாடல்களில் அமைந்த உவமையைக் கொண்டோ அல்லது சிறந்த தொடரைக் கொண்டோ பெயர் பெற்றுள்ளனர். **அரிசியில்கிழார், அள்ளூர் நன்முல்லையார், கூடலூர் கிழார், மதுரை நல்வெள்ளியார்** போன்ற புலவர்கள் அவர்களது **ஊர்ப்பெயர்களோடு** சேர்த்து வழங்கப்பட்டவர் ஆவார்கள். **கொல்லன் அழிசி, ஆசிரியன் பெருங்கண்ணனார், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தனார்** முதலியோர் அவரவர் **தொழில் பெயரோடு** சேர்த்து வழங்கப்பட்டனர். குறுந்தொகைப் பாடல்களைப் பாடிய புலவர்களில் **அள்ளூர் தன் முல்லையார், ஆதிமந்தையார், ஊண்பித்தை, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், பூங்கணுத்திரையார், வருமுலையார்த்தி, வெள்ளி வீதியார்** ஆகியோர் **பெண்பாற் புலவர்கள்** ஆவார்கள்.

குறுந்தொகையில் பாடிய சில பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை. அதனால், அப்புலவர்களை எவ்வாறு பெயரிட்டு அழைப்பது என்று தெரியாததால் புலவர்கள் பாடிய உவமைத் தொடரை அழைத்திருக்கின்றார்கள் என்பதை குறுந்தொகைப் பாடல் வழி அறியமுடிகிறது.

**கல்பொரு சிறுநுரையார்**

பாறையில் மோதி சிதறும் கடல் அலையின் மெல்லிய நுரைபோல, தலைவனின் பிரிவைத் தாங்க முடியாமல் தலைவியின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக அழிகிறது என்பதை,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.36*

**“யாம், எம் காதலர்க் காணேம் ஆயின்**

**செறிதுனி பெருகிய நெஞ்சமொடு, பெருநீர்க்**

***கல்பொரு சிறுநுரை* போல,**

**மெல்ல மெல்ல இல்லாகுதுமே”. (குறுந் - 290)**

இப்பாடல் தலைவியின் அகப்போராட்டத்தை விவரிக்கிறது. இயற்கை நிகழ்வான *‘நுரை அழிதல்’* என்ற பாடலோடு பொருந்திப் பார்க்கையில் தொல்காப்பிய உவமையான மெய், பயன் உவமத் தோற்றமும், சிறப்பு, நலன், காதல், வலி என்ற நான்கு நிலைக்கலன்களும், உள்ளுறை, இறைச்சி, போன்ற உவமைகளும் வெளிப்படுகிறது.

**“வினைபயன் மெய்உரு என்ற நான்கே**

**வகைபெற வந்த உவமைத் தோற்றம்” (தொல்- உவ.நூற்பா-272)**

தொல்காப்பிய கூற்றுப்படி வினை, பயன், மெய், உரு என நான்கும் உவமைத் தோற்றமாகும் என கூறுகிறார்.

**செம்புலப் பெயல்நீரார்**

செம்மண்ணில் பெய்த மழைநீர் அந்த மண்ணோடு கலந்து பிரிக்க முடியாதவாறு ஒன்றிவிடுவது போல தலைவன், தலைவியின் உள்ளங்கள் கலந்து விட்டன என்பதை,

**“யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**

**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**

**செம்புலப் பெயல் நீர் போல**

**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.” (குறுந்-40)**

அவ்வகையில் மழைநீர் மண்ணோடு கலக்கும் செயல்பாடு வினையாகவும், மண்ணும் நீரும் கலப்பது பயனாகவும், தலைவன், தலைவியின் காதல் உணர்வு மெய்யாகவும், இப்பாடலில் அவ்வுணர்வை முதன்மையாக வெளிக்கொண்டு வருவது (*உரு - நிறம்) உவமத்தோற்றத்தின்* வழி என்பதை தெளிவாக அறியமுடிகிறது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.36*

**“உவமப் பொருளை உணருங் காலை**

**மருவிய மரபின் வழக்கொடு வருமே.” (தொல் - 292)**

உவமையும் உவமிக்கப்படும் பொருளும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அது வினை, பயன் மெய், உரு என்ற பொதுப்பண்மையிலும் சிறப்பானதாகவும், உயர்வாகவும் இருக்க வேண்டும்.

சங்ககால மக்களின் காதல் ஆதாரத்தை உயர்த்திய பெருமை செம்புலப் பெயர்நீராருக்கு உண்டு என்பதை இப்பாடல் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

**அணிலாடு முன்றிலார்**

ஊர்மக்கள் அனைவரும் உறங்கிக் கொண்டு இருக்கும் நள்ளிரவில் அமைதியான சூழலில் தலைவியின் வீட்டு முற்றத்தில் அணில்கள் விளையாடி கொண்டு இருக்கும் பயமற்ற நிலையின் சூழலினை காட்சியளிக்கிறார்.

**“ மக்கள் போகிய *அணில் ஆடு முன்றிற்***

**புலப்பில் போலப் புல்லென்று அலப்பென்.” (குறுந் - 41)**

அணில்கள் விளையாடுகின்றன என்னும் பாடல் வரிகள் மூலம் தலைவியின் வீட்டில் தனிமையையும், அமைதியையும், தலைவன் இல்லாததால் ஏற்பட்ட ஆதரவற்ற சூழலையும் மிக வலிமையாகக் காட்டுகிறது. இதில் தொல்காப்பியர் கூறும் *உரு உவமை* தோற்றத்தின் அடிப்படையிலும், *போல* என்னும் உவம உருபு வெளிப்படையாகவும் சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கு நிலைகளன்களிலும் காட்சியளிக்கிறது என்பதை விளக்குகிறது.

**ஓரேருழவர்**

ஒரு பெரிய நிலப்பரப்பை ஒரே ஒரு ஏரை வைத்துக்கொண்டு உழுது முடிக்க நினைக்கும் உழவனின் தவிப்பைப் போல தலைவியைப் பிரிந்து தனிமையில் வாடும் தலைவனின் நிலைக்கு உவமையாக கூறுகிறார்.அவை,

**“ஈரம்பட்ட செவ்விப் பைம் புனத்து**

**ஓர்ஏர் உழவன் போல**

**பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ மானே.” (குறுந் - 131)**

இதில் வினை, பயன் உவமை முதன்மையாக பயின்று வந்துள்ளது.

**“போல மறுப்ப ஒப்பக் காய்ந்த நேர வியப்ப தளிர் நந்தவென் றொத்துலவரு கிளவி உருவி**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.36*

**னுவமம்."** ( தொல் - 287 )

என்னும் நூற்பா படி **'போல'** இன்னும் உவம உருபு வெளிப்படையாகவும், காதல், வலி என்னும் நிலைகலன்களும் அகத்திணையின் உணர்வுகளைத் தொழில் சார்ந்த காட்சியோடு இணைத்து காட்டியுள்ளதை பாடல் வழி அறியமுடிகிறது.

**குப்பைக்கோழியார்**

குப்பையில் நடக்கும் கோழியின் போரினை போல தலைவியின் காதல் உள்ளுணர்வு (உரு) போராட்டத்தின் துயரத்தையும், போரில் குப்பைக் கோழி சிறகுகள் சிதறுவது போல தலைவின் துயரால் உடல் (மெய்) மெலிகிறது என்பதை புலவர் காட்சிப்படுத்துகிறார்.

**"உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்**

**குப்பைக் கோழித் தனிப்போர் போல,**

**களைவோர் இலை- யான்உற்ற நோயே."** **(குறுந் - 305)**

இதில் மெய்,உரு என்னும் உவமத்தை முதமையாகக் கொண்டு இப்பாடல் அமைகிறது. போல என்னும் உருபும் வெளிப்படையாகவும், குப்பையில் கோழிகள் அடித்துக்கொள்வது போல அவளது ஆசைகளும், ஏக்கங்களும் ஒன்றோடொன்று மோதி அவளைச் சிதைக்கின்றன என்பதை காதல், வலி நிலைக்களன் வாயிலாக உள்ளுறைத் துயரத்தின் உச்சத்தை வகைப்படுத்துகிறது. தலைவியின் காதல் உள்ளத்துப் போரினை, கோழிப்போரோடு இணைத்தது இப்பாடலின் தனிச்சிறப்பாகும். இதை,

**"சிறப்பே நலனே காதல் வலியோடு**

**அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப."** **(தொல் - 275)**

என்று தொல்காப்பியர் கூறும் நூற்பா படி இப்பாடல் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**விட்டக்குதிரையார்**

தலைவி, தலைவன் மீது கொண்ட காதல் வருத்தத்தையும் மற்றும் தலைவன் காதல் நோயையும் நேரடியாக சொல்லாமல் மறைமுகமாக **(உள்ளுறை உவமையால்)** இயற்கையோடு உவமையை ஒப்பிட்டு புரிய வைக்கிறார் புலவர்.அவை,

**"விட்ட குதிரை விசைப்பின் அன்ன,**

**விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்"** **(குறுந் - 74)**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
[www.tamilmanam.in](www.tamilmanam.in)
*DOI: https://doi.org/10.63300/tm07042026.36*

என்ற பாடலில் கட்டு அவிழ்த்து விட்ட குதிரை போல, விடுபட்ட மூங்கில் வானைத் தொடும் என **வினை உவமும்**, தலைவனின் காதல் நோயானது வெயில் காலத்தில் காளை மாடு சோர்ந்து கிடப்பது போன்றது என **மெய் உவமும்**, **அன்ன** என்னும் **உவம உருபும், உள்ளுறை உவம**மாக அமைந்துள்ளது.

தொல்காப்பியர் கூற்றுப்படி,

**“உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்” (தொல் - 279)**

என இந்த இரண்டு உவமையும் அனைவரும் ஏற்கும் வகையில் இயல்பாக அமைந்துள்ளதைப் பாடல் விளக்குகிறது. புலவர்கள் இலக்கியத்தை இலக்கணத்தோடு இயல்பாக இணைத்து காட்டியுள்ளதை இப்பாடல் விவரிக்கிறது.

**மீனெறிதூண்டிலார்**

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி தோழியிடம் தனது ஏக்கத்தைக் கூறி திருமணத்தை நீடித்தலை ஆற்றுவிக்கிறாள். அவை,

**“ கானயானை கைவிடு பசுக்களை**

**மீன் ஏறி தூண்டிலின் நிவக்கும்”** (குறுந் - 54)

யானையால் கைவிடப்பட்ட மூங்கில் நிமிரும் காட்சியை, மீன் பிடிக்கும் தூண்டிலின் அசைவுக்கு வினை தோற்றத்தில் சிறப்பு உவமையாக்கியது. ஆனால் கவண் ஒலிக்கு பயந்து யானை விட்ட மூங்கில் நிமிர்வது போல, தலைவியின் உயிரும் தலைவனுடன் சென்றுவிட்டது என உள்ளுறை உவமத்தைக் குறிப்பால் வெளிப்படுத்தும் திறத்தைக் கொண்டுள்ள சிறப்புமிக்க புலவர்கள், குறுந்தொகையில் பாடல்கள் பாடியுள்ளனர் என்பதை நுண்ணிய அளவில் அறியமுடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் அகத்திணை மாந்தர்களின் நுண்ணிய உணர்வை, துணிந்து பொருள் கொள்ளும் திறனுடைய புலவர்கள் அவர்களின் சூழல்களுக்கு கேற்ப உள்ளம் இனிக்கும் உவமைகளை படைத்தனர். குறுந்தொகையில் இருநூற்றாறு புலவர்களில் பதின்மூவரின் பெயர்கள் அவர்கள் பாடிய பாடலில் உள்ள உவமை தாக்கத்தால், புலவர்களின் இயற்பெயர் மறைந்து உவமப் பெயராலே அழைக்கப்படும் வழக்கம் இருந்துள்ளதை சங்க இலக்கிய நூலான குறுந்தொகை வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1]. குறுந்தொகை - கவிஞர் சக்தி, - கலியபெருமாள் மகாகவி, பதிப்பகம்.

[2]. சங்க இலக்கியம் குறுந்தொகை 1,2 (மூலமும் , உரையும்) - முனைவர் அ.மா.பரிமணம், முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்

[3]. தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் (உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்) - சிவலிங்கனார்.

[4]. தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணனார்.

Tamilmanam